பங்கு பற்றும் ஒவ்வொரு அமைப்புகளும் தங்களுக்கு உகந்த வகையில் இதனை மாற்றியமைக்க வேண்டும்

உடனடி வெளியீட்டுக்காக

**ஸ்கார்பாரோ ஒன்ராறியோ சுகாதார அணி முழுபயன்பாட்டு நிலையை நோக்கி நகர்கிறது**

ஸ்கார்பரோ (ஆவணி 13, 2020) – ஒரு உற்சாகமான முன்னேற்றத்தில், 40க்கும் மேற்பட்ட ஸ்கார்பாரோ சுகாதாரசேவை வழங்குநர்களின் குழு இப்போது தயார்நிலை மதிப்பீட்டு செயல்முறையின் அடுத்த கட்டத்திற்கு செல்லவும், ஸ்கார்பாரோ ஒன்ராறியோ சுகாதார அணி (OHT) ஆக முழுபயன்பாட்டு நிலையை பூர்த்தி செய்யவும் அழைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பம் செப்டம்பர் 18, 2020 அன்று சுகாதார அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்படும்.

ஒப்புதல் அளிக்கப்பட்டால், ஒன்ராரியோ மக்களின் சுகாதார சேவை தேவைகளை ஆதரிக்கும். ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட 29 அணிகளில் ஸ்கார்பாரோ ஒன்ராறியோ சுகாதார அணியும் ஒன்று சேரும். முழுமையாக நடைமுறைப்படுத்தும் போது, இது மாகாணத்தின் மிகப்பெரிய மக்கள் தொகையில் ஒன்றாகும். முதல் ஆண்டில், குழு ஸ்கார்பாரோவின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்கள்தொகையில் கவனம் செலுத்துகிறது: அதாவது வயது தொடர்பான குறைபாடுள்ளவர்கள்/பலவீனமான முதியவர்கள், அத்துடன் பல நாட்பட்ட நோய்கள் மற்றும் மனநல பாதிப்பு உள்ளவர்கள் இதில் அடங்குவர். ஸ்கார்பாரோவின் மாறுபட்ட சமூகத்திற்கான சுகாதாரத்தில் சமபங்கு வகிப்பதில் ஒன்ராறியோ சுகாதார அணிமுன்னுரிமை வழங்குகின்றது.

”ஸ்கார்பாரோ ஒன்ராறியோ சுகாதார பங்காளர்கள், ஒரு ஒருங்கிணைந்த பராமரிப்பு முறையை வடிவமைப்பதில் உறுதியாக உள்ளனர். இது தனிநபர் மற்றும் குடும்பத்தை மையமாகக் கொண்ட பராமரிப்பை முன்னணியில் வைக்கிறது மற்றும் எளிதாக அணுகவும் மற்றும் பயன்படுத்தவும் முடியும்” என்று வாடிக்கையாளர்களின் குடும்ப ஆலோசகர் லோரி பெர்கர் ஹெய்கி கூறினார்

ஒன்ராறியோ சுகாதார அணிகள் தரமான சுகாதாரத்துக்கான தேவைகளை மேம்படுத்துவதற்கும் ஒரு சிறந்தநோயாளியின் அனுபவத்தை வழங்குவதற்குமான ஒன்ராறியோ அரசாங்கத்தின் திட்டத்தின் ஒரு பகுதியாகும். மருத்துவ சேவை அளிப்போர் (மருத்துவமனைகள், மருத்துவர்கள் மற்றும் வீடு மற்றும் சமூக பராமரிப்பு வழங்குபவர்கள் உட்பட ) இவர்கள் எங்கிருந்தாலும் ஒரு ஒருங்கிணைந்த குழுவாக செயல்படுகிறார்கள்.

இவர்கள் எங்கு கவனிப்பை வழங்கினாலும் மக்கள் சுகாதார அமைப்பை வழிநடத்துவதையும், சேவையாளர்களுக்கிடையிலான மாற்றத்தையும் எளிதாக்குகிறார்கள். COVID-19 காலப்பகுதி முழுவதும் ஸ்கார்பாரோ சுகாதாரப் பங்காளிகள் பல புதிய மற்றும் ஆக்கபூர்வமான வழிகளில் ஒத்துழைத்துள்ளனர். தொற்று நோயிலிருந்து நாம் கற்றுக் கொண்ட பாடங்கள் அனைவரும் ஒன்றாக முன்னேறும் போது நல்ல பயன்பாட்டுக்கு வரும்,

“எங்கள் நீண்டகால ஒத்துழைப்பு வரலாற்றைக் கட்டியெழுப்புவதின் மூலம் ஸ்கார்பாரோ மக்களுக்கு எவ்வாறு பாதுகாப்பு வழங்கப்படுகிறது என்பதை நாங்கள் உறுதிப்படுத்த முடியும்.” என்று ஸ்கார்பாரோ சுகாதாரவலையமைப்பின் தலைவரும், தலைமை நிர்வாக அதிகாரியுமான எலிஸிர்பேர்த்புல்லர் கூறினார்.

www.ontario.ca/connectedcareஇல் ஒன்ராறியோ சுகாதார அணிகளைப் பற்றி மேலும் அறியலாம். தொடர்ந்து ஸ்கார்பாரோ ஒன்ராறியோ சுகாதார அணிதொடர்பான கேள்விகளுக்கு, தயவு செய்து communications@shn.ca மின்னஞ்சல் ஊடாக தொடர்பு கொள்ளவும்.

**ஸ்கார்பாரோ சுகாதார வலையமைப்பு பற்றி**

எங்கள் மூன்று மருத்துவமனைகள் மற்றும் எட்டு கிளைகளில், ஸ்கார்பாரோ சுகாதார வலையமைப்பு (SHN), எதிர்காலத்தின் கவனிப்பை வடிவமைக்கிறது. எங்கள் பல திட்டங்கள் மற்றும் சேவைகள் கனடாவின் மிகவும் துடிப்பான மற்றும் மாறுபட்ட சமூகங்களில் ஒன்றின் தேவைகளைச் சுற்றி வடிவமைக்கப்பட்டுள்ளன. நாங்கள் ஒன்ராறியோவின் சிறுநீரக நோய் பராமரிப்பு திட்டத்திற்கும், அத்துடன் கிழக்கில் ஸ்கார்பாரோ மற்றும் சுற்றியுள்ள சமூகங்களுக்காக நியமிக்கப்பட்ட இருதய பராமரிப்பு மற்றும் முதுகெலும்பு மையத்திற்கும் சொந்தமாயுள்ளோம். டொராண்டோ பல்கலைக்கழகத்திற்கான சமூகத்துடனிணைந்த கற்பித்தல் தளமாகவும் மற்றும் பல பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளுடன் கூட்டாளியாகவும்,அடுத்த தலைமுறை சுகாதார நிபுணர்களுக்கு பயிற்சி அளிக்க உதவுவதிலும் பெருமிதம் கொள்கிறோம். மேலும் அறிவதற்கு shn.ca அணுகவும்.

**ஊடகத்தொடர்புக்கு:**

Lisa Cipriano, Communications and Public Affairs Scarborough Health Network (on behalf of the Scarborough Ontario Health Team)